தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MCOP. No.61/2023

RW: 1

2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஃப்பெரடிக்ஸ் | த/ பெ. | : | திரு. ஆனந்தராயன் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| தொழில் | : | உதவி மேலாளர் | வயது | : | 32 |

15.07.2026

முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 5 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரிகிறேன். நான் 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் சாட்சி 1 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 23.02.2026 ஆம் தேதியிட்ட எங்கள் நிறுவன **ஆராய்வாளர் அறிக்கையும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் அசல் எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.**

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த விபத்து 08.07.2022 அன்று நடந்ததாக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தை எங்களுடைய நிறுவனம் கள ஆராய்வாளர் சென்று பார்த்தார் என்றால் சரிதான். எங்களுடைய நிறுவனத்திற்கு யார் தகவல் சொன்னார் என்றாலும், எப்போது சொன்னார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இந்த விபத்து சம்பந்தமாக கள விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். விசாரணை அதிகாரி நியமித்து அறிக்கை பெற்று அந்த அறிக்கையின் அடிப்படையில் தான் சாட்சியம்

அளிக்கிறேன். இந்த விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதி 08.07.2022 எங்கள் நிறுவனத்திலிருந்து கள ஆய்வு மேற்கொண்ட தேதி எனக்கு தெரியவில்லை. முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரர் பெயர் குமார் என குறிப்பிடப்பட்டுள்ளளது அவர் யார் என்று எனக்கு தெரியவில்லை.

விபத்து நடந்த இடம் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை என்று கோப்புகளின் அடிப்படையில் தெரிந்துக்கொண்டேன். அந்த சாலை போக்குவரத்து அதிகம் உள்ள சாலை என்றால் பொதுவாக அதிகமாக இருக்கும். விபத்து சமயம் சம்பவ இடத்தில் 3 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான லாரி நிறுத்தப்பட்டிருந்ததாக கோப்புகளில் கண்டுள்ளது என்றால் சரிதான். ஓரமாக நிறுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்கு வழி சாலையில் உள்ள Service ரோட்டில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்ததா, நான்கு வழி சாலையிலேயே நிறுத்தப்பட்டிருந்ததா என்று குறித்து விசாரணை செய்யப்பட்டதா என்றால் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு போக்குவரத்து வாகனம் கவனமாக வந்தது என்றாலும், பழுது ஏற்பட்ட லாரி Service சாலையில் நிறுத்தாமல் நான்கு வழி சாலையிலேயே நிறுத்தப்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. லாரி பழுது ஏற்படவில்லை.

பழுது ஏற்படாத லாரியை பிரதான சாலையில் நிறுத்துவது விபத்தை ஏற்படுத்தக்கூடிய அஜாக்கிரதையான செயல் என்றால் சரிதான். ஆனால் இந்த லாரி ஓரமாக தான் நின்றது. எ.ம.சா.ஆ.1 உடன் இணைக்கப்பட்டுள்ள சம்பவ இடம் குறித்து வரைப்படத்தில் விபத்து பிரதான சாலையின் நடுவே நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வலது புறம் ஓரமாக தான் விபத்து நடந்தது. எங்கள் காப்பீட்டு நிறுவனம்இழப்பீட்டு தொகையை கொடுக்கதவிர்ப்பதற்காக எங்கள் நிறுவனத்திலிருந்து தயார் செய்யப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த விபத்திற்கு அரசு போக்குவரத்துகழக ஓட்டுநரின் அஜாக்கிரதையோ, கவனக்குறைவோ காரணம் இல்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் போக்குவரத்து கழக ஓட்டுநர் 1ம் எதிர்மனுதார் பெயர் தான் இடம் பெற்றுள்ளது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் தான் அலுவலகத்தில் பணியில் இருந்ததாகவும், விபத்து பற்றி தகவல் அறிந்து சம்பவ இடம் சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயம் சம்பந்தப்பட்ட லாரி நான்கு வழி சாலையில் நிறுத்தப்பட்டிருந்ததா, ஓடிக்கொண்டிருந்ததா என்பது குறித்து கிராம நிர்வாக அலுவலருக்கு தெரியாது என சொல்லியுள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் லாரி தான் என்பதால் முழு நஷ்டஈடு தொகையையும் அதன் காப்பீட்டு நிறுவனமான நாங்கள் தான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கு இன்றுவரை நிலுவையில் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அந்த குற்ற வழக்கு நிலுவையில் இருப்பதால் அரசு போக்குவரத்து வாகன ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரியல்ல. இந்த விபத்து இரு வாகனம் மோதி கொண்டதால் ஏற்பட்டது என்றால் சரிதான். நின்று கொண்டிருந்த வாகனத்தில் மோதி இந்த விபத்து ஏற்பட்டது. அவ்வாறு நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நின்று கொண்டிருந்ததாக சொல்லப்படும் வாகனம் நடு ரோட்டில் தான் நின்றுகொண்டிருந்தது என்றால் சரியல்ல. இந்த விபத்தில் 1 ம் மனுதாரரின் கணவர் மணிகண்டன் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

இந்த விபத்திற்கு இரு வாகனங்களும் காரணம் என்பதால் மனுதாரர்களுக்கு மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகையை இரு வாகனத்தின் காப்பீட்டுதாரர்களும் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.07.15 17:56:00 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்